بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْم نَحْمَدُهٗ وَنُصَلِّى عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْم وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

# பத்ர் போரில் கலந்து கொண்ட மகத்துவமிக்க சஹாபாக்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 23 நவம்பர் 2018 அன்று ஆற்றிய ஜும்ஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்று முதல் நான் மீண்டும் பத்ர் போர் சஹாபாக்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன். முதலாவதாக, ஸினான் பின் அபீ ஸினான் என்ற நற்குறிப்பை பார்ப்போம். பத்ர் போர் உட்பட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எத்தனை போர்கள் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் வந்தனவோ அவை அனைத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். பைத்தே ரிஜ்வானில் முதல் முதலில் யார் பைஅத் செய்தார் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. ஆனால் பக்தவியைப் பொருத்தவரை ஹஸ்ரத் ஸினான் பின் அபீ ஸினான் முதல் முதலில் பைஅத் செய்தார்கள். வேறு சிலரைப் பொருத்தவரை ஹஸ்ரத் ஸினான் அவர்களின் தந்தையார்தான் முதல் முதலில் பைஅத் செய்தார்கள் என்று கூறுகின்றார்கள்.

பைத்தே ரிஜ்வான் சம்பவத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களிடம் பைஅத் வாங்க துவங்கியபோது ஹஸ்ரத் ஸினான் (ரலி) அவர்கள் தனது கையை நீட்டினார்கள். என்னிடம் பைஅத் வாங்குங்கள் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் எந்த விஷயத்தில் என்னிடம் பைஅத் செய்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு, ஹஸ்ரத் ஸினான் (ரலி) அவர்கள், வெற்றி பெற வேண்டும் அல்லது ஷஹாதத்தை அடைய வேண்டும் என்ற இந்த விஷயத்தின் மீது நாங்கள் பைஅத் செய்கின்றோம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஸினான் (ரலி) அவர்கள் முஹாஜிரீன் சஹாபாக்களைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். துலைஹா பின் குவைலத் நபித்துவ வாதம் செய்தவுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முதல் முதலில் ஹஸ்ரத் ஸினான் அவர்கள்தான் கடிதம் எழுதி தகவல் கொடுத்தார்கள்.

இரண்டாவது சஹாபி, ஹஸ்ரத் மஹ்ஜா அவர்கள் ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அடிமை ஆவார்கள். பத்ர் போரில் முதலாவது ஷஹீது அன்னார்தான். அன்னார் முஹாஜிரீன்களில் முதன்மையானவர்களில் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் ஸைது பின் முஸய்யப் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் மஹ்ஜா ஷஹீதானபோது அன்னாரது நாவில் அனா மஹஜாவுன் வஇலா ரப்பி அர்ஜி – நான் மஹஜாவாவேன். மேலும் நான் எனது இறைவனின் பக்கம் திரும்புகின்றேன். அன்னாரது நாவிலிருந்து இந்த சொற்கள் வெளிவந்தன.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஆமிர் பின் மஹ்லத் என்பவர் ஆவார். பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். மேலும் உஹது நாளன்று அவர் ஷஹீதானார்.

அடுத்த சஹாபி இவர் ஹாத்திப் பின் அம்ர் பின் அப்தே ஷம்ஸ் ஆவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கத்திற்கு வருவதற்கு முன்னதாக ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் அவர்களின் தப்லீக்கின் மூலமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். அபிஸீனியா நாட்டின் பக்கம் இரு முறை ஹிஜ்ரத் செய்தார். ஓர் அறிவிப்பின் அடிப்படையில், முதலாவது ஹிஜ்ரத்தில் எல்லோரையும் விட முதலில் அபிஸீனிய நாட்டிற்கு வந்த முதல் நபர் ஹஸ்ரத் ஹாத்திப் பின் அம்ர் பின் அப்தே ஷம்ஸ் ஆவார். பத்ர் போரில் தனது சகோதரர் சுஹைது பின் அம்ர் அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றிருந்தார்கள். உஹது போரிலும் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சவ்தா பின்த் ஸம்ஆ அவர்களுடன் ஹஸ்ரத் ஹாத்திப் அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். ஹுதைபிய்யா இடத்தில் நடைபெற்ற பைஅத்தே ரிஸ்வானிலும் ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் பங்கு பெற்றிருந்தார்கள்.

அடுத்த ஒரு சஹாபி அவரின் பெயர் அபூ ஹுஸைமா பின் அவ்ஸ் ஆகும். அன்னார் பத்ர் போரிலும் உஹது போரிலும், அகழ் போரிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஏனைய அனைத்துப் போர்களிலும் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் அன்னாரது மரணம் நிகழ்ந்தது.

அடுத்து ஒரு சஹாபி ஹஸ்ரத் தமீம் மவ்லா ஹராஷ் ஆகும். பத்ர் மற்றும் உஹது போரிலும் அன்னார் பங்கு பெற்றிருந்தார்கள்.

அடுத்த ஒரு சஹாபி ஹஸ்ரத் முன்ஸிர் பின் கதாமா ஆவார்கள். அன்னார் பத்ர் மற்றும் உஹுது போரில் பங்கு பெற்றிருந்தார்கள்.

அடுத்த ஒரு சஹாபி ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹாத்திப் ஆவார்கள். ஹஸ்ரத் ஹாரிஸ் பின் காத்திப் மற்றும் ஹஸ்ரத் அபூ லுபாபா பின் அப்துல் முன்ஸிர் ஆகியோர் ஹுஸூர் (ஸல்) அவர்களுடன் பத்ர் போருக்காக சென்று கொண்டிருந்தனர். ரூஹா

என்ற இடத்தல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ லுபாபா பின் அப்துல் முன்ஸிர் அவர்களை மதீனாவின் ஆளுநராகவும், ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹாத்திப் அவர்களை பனூ அம்ர் பின் அவ்ஃப் கோத்திரத்தின் அமீராக நியமனம் செய்து மதீனாவிற்கு திருப்பி அனுப்பினார்கள். ஆனால் அந்த இருவரையும் பத்ர் சஹாபாக்களில் இணைத்தவாறு போரில் வெற்றி பெற்ற செல்வங்களில் அவர்களுக்கும் பங்களித்தார்கள். ஹஸ்ரத் ஹாரின் பின் ஹாத்திப் அவர்களுக்கு பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்து போர்களிலும், பைஅத்தே ரிஸ்வானிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெறுவதற்கு நற்பாக்கியம் கிடைத்திருந்தது. கைபரின் போருக்கிடையில் ஒரு யூதர் கோட்டையின் மேலிலிருந்து அம்பு ஒன்றை ஏய்தான். அது ஹஸ்ரத் ஹார்ஸா பின் ஹாத்திப் அவர்களது தலையில் பாய்ந்தது. அதன் மூலம் அன்னார் ஷஹீதானார்கள்.

ஹஸ்ரத் ஸல்பா பின் ஸைது ஒரு சஹாபி ஆவார்கள். அன்னாரின் தொடர்பு அன்ஸார் கோத்திரமான பனூ ஹஸ்ரஜை சார்ந்ததாக இருந்தது. பத்ர் போரிலும் இவர்கள் பங்கு பெற்றிருந்தார்கள். மிகவும் உறுதிவாய்ந்த இதயம் படைத்தவராக அன்னார் திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் உக்பா பின் வஹப் ஒரு சஹாபி ஆவார்கள். பத்ர், உஹது மற்றும் அகழ் போர்கள் உட்பட அனைத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றுள்ளார்கள். மதீனாவில் யூதர்களின் ஒரு குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக வந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு தப்லீக் செய்தார்கள். ஆனால் யூதர்களோ இவ்விஷயத்தை ஏற்க மறுத்து விட்டனர். அப்போது உண்மையை ஏற்க மறுத் யூதர்களை சஹாபாக்கள் குற்றம் சுமத்தினார்கள். அதில் ஹஸ்ரத் உக்பா பின் வஹப் அவர்களும் அடங்குவார்கள்.

ஹஸ்ரத் ஹபீப் பின் அஸ்வத் ஒரு சஹாபி ஆவார். பத்ர் போரிலும், உஹது போரிலும் அவர் கலந்து கொண்டிருந்தார்.

அடுத்து ஹஸ்ரத் ஹேஸ்மா அன்ஸாரி சஹாபி ஆவார். பத்ர், உஹது மற்றும் அகழ் போர்கள் உட்பட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அனைத்து போர்களிலும் பங்கு பெற்றுள்ளார். ஹஸ்ரத் முஆவிய்யா பின் அபீ சுஃப்யான் காலத்தில் அன்னாரின் மரணம் நிகழ்ந்தது.

ஹஸ்ரத் ராஃபி பின் ஹாரிஸ் ஒரு சஹாபி ஆவார். பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அனைத்து போர்களிலும் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் அன்னார் மரணமடைந்தார்கள்.

ஹஸ்ரத் ரஹீலா பின் சஃலபா அன்ஸாரி ஒரு பத்ர் போர் சஹாபி ஆவார். அவரது பெயரும் பல வகைகளில் கூறப்பட்டுள்ளது. பத்ர் மற்றும் உஹது போரில் பங்கு பெற்றார்கள். அன்னார் ஹஸ்ரத் அலி அவர்களுடன் ஸஃபைன் போரிலும் பங்கு பெற்றார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் பின் ரியாப் ஒரு சஹாபி ஆவார். ஹஸ்ரத் ஜாபிர் அவர்களுக்கு அன்ஸார்களில் முதல் முதலில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட ஏழு நபர்களில் ஜாபிர் அவர்களும் அடங்குவார். ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட ஏனைய அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து பல அறிவிப்புகளையும் செய்துள்ளார்கள். பைஅத்தே உக்பா மற்றும் ஊலா நிகழ்வின்போது அன்ஸாரிகளிலிருந்து முதல் முதலில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டவர் இவரே ஆவார்.

ஹஸ்ரத் சாபித் பின் இக்ராம் பின் சஃலபா ஒரு பத்ர் போர் சஹாபி ஆவார்கள். அன்னார் பத்ர் உட்பட அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றுள்ளார்.

மூத்தா போரில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹாவின் ஷஹாதத்திற்குப் பிறகு இஸ்லாமிய கொடியை ஹஸ்ரத் சாபித் பின் இக்ராம் அவர்கள் ஏற்றிப் பிடித்தார்கள். மேலும் முஸ்லிம் கூட்டத்தினரே! உங்களில் ஒருவரை உங்களது தலைவராக ஆக்கிக் கொள்ளுங்கள் என்றும் கூறினார். மக்கள் கூறினர்: நாங்கள் உங்களை ஆக்க விரும்புகின்றோம். அதற்கு அவர், என்னால் அவ்வாறு செய்ய முடியாது என்று கூறினார். அப்போது காலித் பின் வலீது அவர்களை தமது தலைவராக ஆக்கிக் கொண்டார்கள். வரலாற்றில் வருகின்றது. மூத்தா போர் சந்தர்ப்பத்தின்போது முஸ்லிம்கள் எதிரி படையினரை கண்டனர். எதிரிகளின் எண்ணிக்கையும், அவர்களின் போர் தளவாடங்களையும் பார்த்து இந்த படையை எவராலும் எதிர்கொள்ள முடியாது என்று எண்ணினர்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் மூத்தா போரில் பங்கு பெற்றேன். எதிரி எங்களுக்கு அருகில் வந்த உடன் நாங்கள் பார்த்தோம். அவர்கள் எண்ணிக்கையிலும், ஆயுதங்களிலும், குதிரைகள் மற்றும் தங்கம் மற்றும் பட்டாடை போன்றவற்றிலும் அவர்களை எதிர்த்து போரிடுவது எவராலும் முடியாத காரியமாகும். இதைப் பார்த்து எனது கண்கள் சோர்ந்து விட்டன. அப்போது சாபித் பின் இக்ராம் என்னிடத்தில் கூறினார்கள்: அபூ ஹுரைராவே! நீர் மிகப்பெரிய ஒரு படையைப் பார்த்தது போன்று உமது கண்கள் ஆகிவிட்டன. அதற்கு ஹஸ்ரத் அபூ ஹுரைரா அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஆமாம் என்று கூறினேன். அப்போது ஹஸ்ரத் சாபித் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எங்களுடன் பத்ர் போரிலும் பங்கு பெற்றிருந்தீர்கள். அங்கும் அதிகமான எண்ணிக்கையின் மூலமாக நமக்கு வெற்றி கிடைக்கவில்லை. மாறாக,

அல்லாஹ்வின் அருளாலேயே நமக்கு வெற்றி கிடைத்தது. இங்கும் அதுவே நடைபெறும். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களுடன் முர்ததாகிப் போன மக்களை எதிர்கொள்ள சென்றனர். அந்த சமுதாயம் பதாகா என்ற இடத்தில் இருந்தது. அன்னார் ஹஸ்ரத் உக்காஷா பின் மஹ்ஸன் மற்றும் ஹஸ்ரத் சாபித் பின் அக்ரம் எதிரிகளைப் பற்றி செய்தியை சேகரித்து வர இருவரையும் ஒற்றராக அனுப்பி வைத்தார்கள். இருவரும் குதிரையில் சவாரி செய்தனர். இவர்கள் இருவரும் துலைஹா மற்றும் அவரது சகோதரர் சலமா அவர்களை நேரடியாக சந்தித்தனர். அவர்கள் இருவரும் இதேபோன்று செய்தி சேகரித்து வருவதற்காக அனுப்பபட்டிருந்தார்கள். துலைஹாவை ஹஸ்ரத் உக்காஷா அவர்கள் எதிர்கொண்டார்கள். சலமாவை ஹஸ்ரத் சாபித் அவர்கள் எதிர் கொண்டார்கள். இந்த இரு சகோதரர்களும் அந்த இரு சஹாபிகளை ஷஹீதாக்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் சல்மா பின் சலாமா பத்ர் போர் சஹாபி ஆவார். மக்களில் முதன் முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டார்கள். அன்னார் பைஅத்தே உக்பா மற்றும் ஊலா மற்றும் சானியாவில் பங்கு பெற்றிருந்தார்கள். மேலும் பத்ர் உட்பட அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள், அன்னாரை தமது கிலாஃபத் காலகட்டத்தில் யமாமா நாட்டினுடைய ஆட்சியாளராக நியமித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சல்மா பின் சலாமா மற்றும் அபூ ஸப்ரா பின் அபீ ரஹம் இடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

அன்னார் தனது குழந்தைப் பருவத்தி ஒரு யூத அறிஞரிடமிருந்து மக்காவில் ஒரு நபி வருவதற்கான செய்தியை கேள்விப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகை பற்றிய தகவல் அவர்களுக்கு கிடைத்தவுடன் அன்னார் ஈமான் கொண்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் குழப்பங்கள் தலை தூக்கிய போது அன்னார் தனிமையை மேற்கொண்டார்கள். மரணிக்கின்றபோது அன்னாருடைய வயது 74–ஆக இருந்தது.

அடுத்து ஹஸ்ரத் ஜபர் பின் அதீக் என்ற பத்ர் போர் சஹாபி ஆவார். பத்ர் உட்பட ஏனைய அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அவர் கலந்து கொண்டுள்ளார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜபர் பின் அதீக் மற்றும் குப்பாப் பின் அர்த் இருவருக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் ஜபர் பின் அதீகின் மரணம் ஹிஜ்ரி 61–ஆம் ஆண்டு யஸீது பின் முஆவிய்யாவின் காலத்தில் 71–வது வயதில் நிகழ்ந்தது.

பிறகு ஹஸ்ரத் சாபித் பின் சஃலபா ஆவார்கள். அன்னார் 70–அன்ஸார்களுடன் பைஅத்தே உக்பா சானியாவிலும் கலந்து கொண்டார். பத்ர், உஹது மற்றும் அகழ் போரிலும் அவர் பங்கு பெற்றிருந்தார். மேலும் ஹுதைபிய்யா சம்பவத்திலும், கைபர் மற்றும் மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்திலும், தாயிஃப் போரின் போதும் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். தாயிஃப் போரில் அன்னார் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் சுஹைல் பின் வஹப் ஒரு சஹாபி ஆவார்கள். ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அபிஸீனியாவற்கு சென்றார். இஸ்லாத்தை வெளிப்படையாக பிரச்சாரம் செய்ய துவங்கியவுடன் மக்காவிற்கு திரும்பி வந்தார். பின்னர் மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு மதீனாவிற்கு சென்று விட்டார். உஹது மற்றும் அகழ் போர் உட்பட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அனைத்துப் போர்களிலும் பங்கு பெற்றார்கள். மதீனாவில் அன்னார் மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள்.

ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ் ஒரு சஹாபி ஆவார். ஹஸ்ரத் துஃபைல் தனது சகோதரர் ஹஸ்ரத் உபைதா மற்றும் ஹஸ்ரத் ஹஸீப் அவர்களுடன் பத்ர், உஹது மற்றும் அகழ் உட்பட அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ் அவர்களை ஹஸ்ரத் மன்ஸிர் பின் முஹம்மது அவர்களுடன் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் துஃபல் அவர்களின் மரணம் 70–வது வயதில் ஹிஜ்ரி 32–ஆம் ஆண்டு நிகழ்ந்தது.

அடுத்து ஒரு சஹாபி ஹஸ்ரத் அபூ சுலைது அஸீரா பின் அமர் ஆவார்கள். பத்ர் மற்றும் ஏனைய யுத்தங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனேயே இருந்தார்கள். அன்னாரின் மகனான அப்துல்லாஹ் அவர்கள் அன்னாரிடமிருந்து ஓர் அறிவிப்பை செய்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கழுதைக் கறி உண்பதை தடை செய்திருந்தார்கள். அப்போது ஒரு பாணைகளில் கழுதைக் கறி சமைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. நாங்கள் அந்த பாணைகளை கீழே கொட்டி விட்டோம்.

ஹஸ்ரத் சஃலபா பின் ஹாத்திப் அன்ஸாரி ஒரு சஹாபி ஆவார். பத்ர் மற்றும் வேறு சில யுத்தங்களிலும் அவர் கலந்து கொண்டதற்கான அறிவிப்பு வரலாற்றில் கிடைக்கின்றது. சஃலபா பின் ஹாத்திப் அன்ஸாரி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு அல்லாஹ் செல்வத்தை வழங்க துஆ செய்யுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் வேதனையாக உள்ளது. மிகக் குறைந்த மக்கள்தான் அல்லாஹ்விற்கு நன்றி கூறுகின்றனர். மேலும் செல்வத்தை சமாளிக்கின்ற ஆற்றல் அவர்களுக்கு இருப்பதில்லை

என்று கூறி துஆ செய்யவில்லை. சிறிது நேரம் கழித்து அவர் மீண்டும் வந்து அல்லாஹ் எனக்கு செல்வத்தை வழங்குவதற்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார். அப்போதும் அன்னார் துஆ செய்யவில்லை. மூன்றாம் முறையாக வந்து துஆ செய்ய கூறியதனால் அன்னார் துஆ செய்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் துஆவின் பரக்கத்தால் அவருக்கு எந்த அளவுக்கு செல்வம் கிடைத்ததென்றால் அவர்களிடத்தில் சில ஆடுகளே இருந்தன. ஆனால் அதில் அபிவிருத்தி ஏற்பட்டது. அதன் பிறகு அந்த நபர் லுஹர் மற்றும் அஸர் தொழுகைக்கு பள்ளிக்கு வருவதை விட்டு விட்டார். பின்னர் ஸக்காத் வசூல் செய்வதற்காக அவரிடம் சில நபரை அன்னார் அனுப்பி வைத்தார்கள். ஆனால் அவர் பல சாக்குப் போக்குகளைக் கூறி ஸக்காத் கொடுக்காமல் இருந்தார். பிறகு ஸக்காத் கொடுப்பவர்கள் தொடர்பாக வசனங்கள் இறங்கியது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பத்ர் போர் சஹாபாக்கள் தொடர்பாக அவர்கள் மன்னிக்கப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியை அல்லாஹ் வழங்கியிருக்கும்போது இந்த அறிவிப்பு தவறாக இருக்குலாம் என்ற எண்ணம் எனது உள்ளத்தில் எழுந்தது. அந்த வகையில் அல்லாமா இப்னு ஹிஜ்ரி அஸ்கலானி அவர்கள் தமது ஆய்வின் மூலமாக, இது ஒரே பெயரைக் கொண்ட இரு நபர்களாவர் என்பதை நிரூபித்தள்ளார்கள். இந்த சம்பவம் சஃலபா பின் அபீ ஹாத்திப் அவர்களுடையதாகும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அல்லாமா பின் ஹிஜ்ர் அஸ்கலானி சாஹிபிற்கு நற்கூலி வழங்குவானாக. அவர்கள் இந்த விவகாரத்தை மிகத் தெளிவுபடுத்தி எடுத்துக் கூறி விட்டார்கள். பத்ர் போர் சஹாபியின் மீது இருந்த குற்றச்சாட்டை அவர்கள் நீக்கி விட்டார்கள்.

அடுத்து ஒரு சஹாபி ஹஸ்ரத் சஅது பின் உஸ்மான் பின் கலத் அன்ஸாரி ஆவார்கள். பத்ர் யுத்தத்திலும் கலந்து கொண்டார்கள். மேலும் உஹது போரில் எவருடைய பாதங்கள் தடுமாற்றங்கள் அடைந்தனவோ அதில் இவரும் ஒருவர் ஆவார். பின்னர் அல்லாஹ் அவர்கள் அனைவரையும் மன்னித்து திருக்குர்ஆனை இறக்கினான். ஹஸ்ரத் சஅது பின் உஸ்மான் மரணிக்கின்ற போது அன்னாரது வயது 80–ஆக இருந்தது.

அடுத்து ஒரு சஹாபி ஆமிர் பின் உமைய்யா ஆவார். பத்ர் போரிலும் பங்கு பெற்றிருந்தார். உஹது போரில் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் ஹிஷாம் பின் ஆமிர் அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் உஹது போரில் ஷஹீதானவர்களை அடக்கம் செய்வது பற்றி கேட்கப்பட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெரிய கபரை தோண்டுங்கள். இரண்டு அல்லது மூன்று பேரை ஒரு கபரில் இறக்குங்கள். யாருக்கு திருக்குர்ஆன் அதிகமாக தெரியுமோ அவரை முதலில் இறக்குங்கள் என்று கூறினார்கள். ஆமிர் பின் உமைய்யா மற்ற இரண்டு நபர்களுக்கு முன்பாக கபரில் இறக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் அம்ர் பின் அபீ ஸரஹ் ஒரு சஹாபி ஆவார். ஹிஜ்ரி 30–ஆம் ஆண்டு ஹஸ்ரத் உஸ்மான் அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் மதீனாவில் மரணமடைந்தார். பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வேறு சில யுத்தங்களிலும் பங்கு பெற்றார்கள்.

பின்னர் ஹஸ்ரத் அஸ்மா பின் ஹுஸைன் ஒரு சஹாபி ஆவார். பத்ர் போரில் பங்கு பெற்றிருந்தார்கள்.

பிறகு ஹஸ்ரத் கலீஃபா பின் அதீ ஒரு சஹாபி ஆவார். பத்ர், உஹது இரண்டு போர்களிலும் அவர் பங்கு பெற்றிருந்தார். பத்ர் போருக்கு முன்பாக இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். உஹது போருக்குப் பிறகு அவரது பெயர் மறைவாகவே இருந்து வந்துள்ளது. ஹஸ்ரத் அலி அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் நடைபெற்ற அனைத்து போர்களிலும் இவர்களும் ஹஸ்ரத் அலி அவர்களுடன் பங்கு பெற்றுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஆஸ் பின் மாஸான் பேரே மவூனா சம்பவத்தில் ஷஹாதத் நிகழ்ந்தது. பத்ர் மற்றும் உஹது போர்களில் பங்கு பெற்றார். அன்னாருடன் அன்னாரது சகோதரர் ஆயிஸ் பின் மஅஸ் அவர்களும் பத்ர் யுத்தத்தில் பங்கு பெற்றார்கள்.

ஹஸ்ரத் சஅது பின் சயீ அல்அஷ்அரி ஒரு சஹாபி ஆவார். பத்ர் மற்றும் உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டிருந்தார்.

அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் பின் ஸைது அவர்கள் ஒரு நஜ்ரானி வாள் ஒன்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பரிசாக அளித்தார்கள். அன்னார் அந்த வாளை ஹஸ்ரத் முஹம்மது பின் முஸ்லிமா அவர்களுக்கு வழங்கி விட்டார்கள். இதனை கொண்டு அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்யுங்கள். எப்போது மக்கள் தங்களுக்கிடையே கருத்து வேறுபாடு கொள்வார்களோ அப்போது நீங்கள் இதனை உடைத்து விடுங்கள். பின்னர் வீட்டினுள் நுழைந்து விடுங்கள். அதாவது எவ்வகையான குழப்பத்திலும் ஃபஸாதிலும் பங்கு பெறாதீர்கள் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஒருவருக்கொருவர் கழுத்தை வெட்டிக் கொண்டிருக்கின்ற முஸ்லிம்களும் இந்த விஷயங்களின்படி நடக்க அல்லாஹ் அருள் செய்வானாக. மேலும் உலகில் அமைதி நிலைபெறட்டுமாக. அல்லாஹ் இந்த சஹாபாக்களின் அந்தஸ்துகளை உயர்த்திக் கொண்டே செல்வானாக. மேலும் நன்மைகள் செய்வதற்கும் தியாகங்கள் செய்வதற்கும் கலப்பற்ற தன்மையுடனும் நன்றியுணர்வுடனும் நமது வாழ்வை கழிப்பதற்கு அல்லாஹ் நமக்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்

**மொழியாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்**